1973 மார்ச் 17]

தங்கத்தைப் பொறுத்தவரை நீலகிரியில் சிறிய அளவு கிடைப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதை முழுமையாகப் பயன்படுத்த முடியுமா என்பது தான் பிரச்சினை. பொருளாதாரத்திற்கு வசதியாக இருக்குமா என்பது மற்றொரு பிரச்சினை. இப்போது கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றபடி பொருளாதார முன்னேற்றத்திற்குப் பயன்படுத்தத்தக்க அளவுக்கு அதிகம் கிடைக்கவில்லை என்று தெரிகிறது.

திரு. ஆ. பரந்தாமன்: யு.என்.டி.பி. கமிட்டியின் பரிந்துரை அடிப்படையில் கிடைக்கக்கூடிய கனிவளத்தைப் பெருக்க அவர்களே முன்வருகிறார்களா அல்லது மத்திய அரசாங்கத்தை வற்புறுத்த வேண்டுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இதற்கு ஐ.நா. உதவி இருக்கிறது. மத்திய அரசாங்கம் அனுமதி தருகிறது.

திரு. ப. முத்துசாமி: தமிழ்நாட்டில் விலை உயர்ந்த பச்சைக் கற்கள், வைரக் கற்கள் கிடைப்பதாகத் தகவல் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தனியாகக் கேள்வி கேட்கவேண்டும்.

திரு. எம். தேவராசன்: நீலகிரியில் கிடைக்கும் பாக்சைட்டைப் பயன்படுத்துவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது எந்த அளவுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அதற்கு நாம் சிலருக்கு அனுமதி கொடுத்திருக்கிறோம். அவர்கள் அதை எடுத்து தொழிலுக்குப் பயன்படுத்துகிறார்கள். மற்ற விவரங்களுக்குத் தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. என். கே. பழனிசாமி: மத்திய சர்க்கார் குழு திருச்சியில் யுரேனியம் அதிகமாகக் கிடைப்பதாகத் தகவல் கொடுத்திருக்கிறார்களா? அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: திருச்சியைப்பற்றித் தனியாகக் கேள்வி கேட்கவேண்டும்.

Fossil trees

*411. *Q*—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that the Geological Department has found out fossil trees near Cuddalore;

(*b*) whether any investigation has been conducted thereon; and

(*c*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) முதல் (உ) வரை. கடலூருக்கருகில், புவியியல் ஆராய்ச்சித்துறை, கல்லாக உறைந்த மரங்கள் எதனையும் கண்டுபிடிக்கவில்லை. எனினும், தென் ஆற்காடு மாவட்டம், திருவக்கரைக்கருகில் கண்டுபிடிக்கப்பட்ட கல்லாக உறைந்த மரக்கட்டை அமைந்துள்ள பகுதி, தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பூங்காவாக இந்தியப் புவியியல் ஆராய்ச்சித் துறையால் வேலியிட்டு பாதுகாக்கப்பட்டுள்ளது. புவியியல் ஆய்வுகளுக்காக பண்டைக் காலத்தில் இருந்தவையும் கல்லாக உறைந்தவையுமான இந்த மரப் பகுதிகளில் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு அவை வேலியிட்டுப் பாதுகாக்கப்படுகின்றன.

கொண்டைக்கடலை விநியோகம்

* 412 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநில அரசு, வெளி மாநிலங்களிலிருந்து கொண்டைக்கடலை தற்போது இறக்குமதி செய்கின்றதா ?

(இ) அப்படி இறக்குமதி செய்யப்படும் கொண்டைக்கடலையை இங்குள்ள வணிகர்களுக்கு வழங்குவதில் கையாளப்படும் முறைகள் யாவை ?

மாண்புமிகு மன்னை ப. நாராயணசாமி : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

Government Ration Shop, Gopalapuram

* 413 Q.—THIRU K. SUPPU : Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) whether it is a fact that the Government Ration Shop at Gopalapuram was looted on 21st August 1972; and

(b) if so, the action taken thereon?

மாண்புமிகு மன்னை ப. நாராயணசாமி : (அ) 21–8–1972-ல் கோபாலபுரத்தில் உள்ள அரசு பங்கீட்டு பொருள் சில்லறை விற்பனைக் கடையில் ரூ. 9,524 ரொக்கம் வைத்திருந்த பெட்டி ஒன்று களவாடப்பட்டது. வேறு இழப்பு எதுமில்லை

(இ) காவல் துறையினரிடம் புகார் ஒன்று தாக்கல் செய்யப்பட்டுப் புலனாய்வு செய்யப்பட்டு வருகிறது, ஒரு காவலாளி மீதும் சில்லறை விற்பனைக் கடையின் கண்காணிப்பாளர் மீதும் ஒழுங்கு நடவடிக்கை தொடங்கப் பட்டுள்ளது.